ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

रोगा हरन्ति सततं प्रबलाश्शरीरं
कामादयोऽप्यनुदिनं प्रदहन्ति चित्तम् ।
मृत्युश्च नृत्यति सदा कलयन् दिनादि
तस्मात्त्वमद्य शरणं मम दीनबन्धो ॥

எவ்வளவு ஔஷதங்களை ஸேவித்தாலும், அவைகளை அற்பங்கூட லக்ஷ்யம் பண்ணுமல் மிகவும் பலமுள்ளவைக ளான ரோகங்கள் சரீரத்தை புஜிக்கின்றன. காமம், குரோ தம் முதலான சத்துருக்கள் ஒவ்வொருநாளும் சித்தத்தை அதிகம் தஹிக்கின்றன. இயமனும் எப்பொழுதும் தினங் களை கணக்கிட்டுக்கொண்டு கூடிய சீக்கிரம் நம்மிடம் வரு வானென்று சந்தோஷத்துடன் நர்த்தனம் செய்கிருன். இவ் விதம் சங்கடமான நிலைமையில் நான் அகப்பட்டுக்கொண்டு கஷ்டப்படுகிற படியால் ஹே தீநபந்தோ! வேறுகதியற்ற வர்களைப் பாதுகார்ப்பதாகக் கங்கணம்பூண்ட பரமேசுவர! இந்த ஸமயம் தாங்கள் தான் என்னை ரக்ஷிக்கவேண்டும்.

ஒரு பக்தன் ஸ்ரீ சந்திரசூடரைப் பார்த்து ஹே பிரபோ! எனக்கு ரோகங்களாலும், காமம் முதலிய சத்துருக்களாலும், உண்டு பண்ணப்படும் கஷ்டங்களால், இவ்வுலகிலும் அதிகமான சிரமத்தை வகிக்கிறேன். "லோகாந்திரத்திலும் இந்தபாபிஎப்பொ ழுது வரப்போகிருன். இவனைக் கொடிய நரகத்தில் தள்ளி ஹிம் சிக்கவேண்டு" மென்று மிகவும் உத்ஸாகத்துடன் அந்தகன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிருன். ஆகையால், இம்மையிலும் மறு மையிலும், உமது அனுக்கிரகமன்றி ஒருவராலும் சுகம்பெற முடியாதென்று என் அனுபவத்தால் அறிந்த நான் உம்மை ரக்ஷ கராக அடைந்தேன். என்னைக்கைவிடாமல் பாதுகார்க்க வேண்டு மென்று பிரார்த்திக்கிருன். சுபம்.

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

ஸம்ஸ்காரங்கள்.

நான்குவித சரீரபேதங்களுள் மானிடசரீரத்தை யெடுத்த ஜீவன் சிறந்தவனென்றும், அவனிலும், வைதிக தர்மத்தில் அதிகாரம் பெற்றவன் சிறந்தவனென்றும், அவனைக்காட்டிலும், வைதிக தர்மங்களை யனுஷ்டித்து வருபவன் மிகச் சிறந்தவனென்றும் நமது சாஸ்திரங்களில் வெளிப்படை. அவ்வாறு தர்மானுஷ்டானம் செய்து வருகின்றவன் ப்ரம்மவர்ச்சஸ மெனப்படும் ப்ரம்ம தேஜஸ்ஸையடைந்து ஸம்பூர்ண ப்ராம்மண்யத்தைப்பெரும் பூஷணமாகக் கொண்டு விளங்குவான். ஆனதால் துவிஜாதியில் ஜனித்தவர்களுக்கு நாற்பது சரீரஸம்ஸ்காரங்களும் எட்டு ஆத்தும குணங்களும் அவசியம் வேண்டியவைகளாகும். ஸம்ஸ்காரமென்பது தோஷங்களை விலக்குவதும், குணங்களை யுண்டுபண்ணுவதுமாகும். நிஷேகாதிகளால் தோஷம் விலகுவதைப்பற்றி மனுஸ்மிருதியில்

**" गार्भैर्होमै र्जातकर्म चौल मौञ्जीनिबन्धनैः ।
बैजिकं गार्भिकं चैनो द्विजानामपमृज्यते ॥ "**

கர்ப்பாதான காலத்தில் காயசுத்திக்காகச் செய்யப்படும் ஹோமங்களாலும், ஜாதகர்மம், சௌளம், உபநயனம் முதலியவைகளாலும் துவிஜாதியிற் பிறந்தவர்களுக்கு சுக்கில சோணிதத்தாலும், கர்ப்பவாஸத்தாலு மேற்படும் தோஷம் விலக்கப்படுகின்றது.

என்று கூறப்படுகின்றது. அவைகளால் குணங்களுண்டாக்கப் படுவதைப் பற்றி யாக்ஞவல்கிய ஸ்மிருதியில்

"चित्रकर्म यथाऽनेकैरङ्गैरुन्मील्यते शनैः ।
ब्राह्मण्यमपि तद्वत्स्यात्संस्कारैर्विधिपूर்வகैः ॥"

சித்திரவேலை, அதற்குரிய அனேக அங்கங்களால்பிரகாசிக்கப் படுவதுபோல் ப்ராம்மண்ய மெனப்படும் ப்ரம்மதேஜஸ் ஸும் முறைவழுவாது நடத்தப்பட்ட நிஷேகாதி ஸம்ஸ்கா ரங்களால் பிரகாசிக்கப்படும்.

என்று கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறாக தோஷத்தை விலக்கி குணத்தைப் புகட்டும் அந்த ஸம்ஸ்காரங்கள் அவசியம் செய்யப் பட வேண்டுமென,

"वैदिकैः कर्मभिः पुण्यैर्निषेकाद्यैर्द्विजन्मनाम् ।
कार्यः शरीरसंस्कारः पावनः प्रेत्य चेह च ॥"

சுருதிகளில் கூறப்படும் புண்ணியமான நிஷேகாதி கர்மங்க ளால் துவிஜாதிகளுக்குச் சரீரஸம்ஸ்காரம் செய்யவேண்டும். இம்மையிலும் மறுமையிலும் பரிசுத்தமாயது.

என்ற வசனத்தில் மனு கூறுகின்றார். அவைகளைக் கணக்கிட்டு கௌதமர் கூறியிருக்கின்றார்.

1. கர்ப்பாதானம்,
2. பும்ஸவனம்.
3. ஸீமந்தோன்னயனம்.
4. ஜாதகர்மம்.
5. நாமகரணம்.
6. அன்னப்பிராசனம்.
7. சௌளம்.
8. உபநயனம்.
9. ப்ராஜாபத்தியவிரதம்.

10. ஸௌம்யவிரதம்.
11. ஆக்னேயவிரதம்.
12. வைசுதேவவிரதம்.
13. ஸமாவர்த்தனம்.
14. விவாஹம்.
15. தேவயக்ஞம்.
16. பிதிருயக்ஞம்.
17. மனுஷ்யயக்ஞம்.
18. பூதயக்ஞம்.
19. ப்ரம்மயக்ஞம்.

(இந்த 7-ம் பாகயக்ஞங்கள்.)

20. அஷ்டகா.
21. ஸ்தாலீபாகம்.
22. மாஸிசிராத்தம்.
23. ஸர்ப்பபலி.
24. ஆக்ரஹாயணீ.
25. ஈசானபலி.
26. ஆக்ரஹாயணம்.

(இந்த 7-ம் ஹவிர்யக்ஞங்கள்.)

27. அக்னிஆதானம்.
28. அக்னிஹோத்திரம்.
29. தர்சபூர்ணமாஸேஷ்டி.
30. சாதுர்மாஸ்யம்.
31. ஆக்ரயணேஷ்டி.
32. நிருடபசுபந்தம்.
33. ஸௌத்திராமணி.

(இந்த 7-ம் ஸோமயக்ஞங்கள்)

34. அக்னிஷ்டோமம். 37. ஷோடசீ.
35. அத்யக்னிஷ்டோமம். 38. வாஜபேயம்
36. உக்த்தியம். 39. அதிராத்திரம்.
40. அப்தோர்யாமம்.

இவை நாற்பதும் சரீர ஸம்ஸ்காரங்களாம். இவைகளில் முதலாவது ஸம்ஸ்காரம் முதல் 19-வது ஸம்ஸ்காரம்வரையுள்ள 19 ஸம்ஸ்காரங்கள் பூர்வ ஸம்ஸ்காரங்களென்றும், மற்ற இருபத்தொன்றும் உத்தர ஸம்ஸ்காரங்களென்றும் ஸ்மிருதிகளில் கூறப்படுகின்றன. அங்ஙனமே ஹாரீதஸ்மிருதியில்.

"ஸம்ஸ்காரங்கள், ப்ராம்மம் என்றும், தைவம் என்றும் இருவகைப்படும். கர்ப்பாதானம் முதல் 19-ம் ப்ராம்மமாம். 7-பாகயக்ஞங்களும், 7-ஹவிர்யக்ஞங்களும், 7-ஸோமயக்ஞங்களும் ஆகிய 21-ஸம்ஸ்காரங்கள் தைவங்களாம். இவற்றுள் பூர்வமெனப்படும் ப்ராம்ம ஸம்ஸ்காரத்தினல் ஸம்ஸ்கரிக்கப்பட்டவன் ரிஷிகளுக்குச் சமானமாவான். உத்தரமெனப்படும் தைவஸம்ஸ்காரத்தினல் தேவர்களுக்குச் சமானமாவான்"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளோடு ஆத்தும குணங்கள் எட்டும் சேர்ந்திருந்தால் ப்ரம்மஸாயுஜ்யத்தை யடைகிறுன். இந்த ஸம்ஸ்காரங்களுள் கர்ப்பாதானம் முதல் உபநயநனம் வரையுள்ள ஸம்ஸ்காரங்கள் துவிஜாதிகளாய் பிறந்த எல்லோருக்கும் அவசியம் செய்யவேண்டியவைகள். பூர்வஜன்ம புண்ணிய வசத்தால் உபநயன மானவுடனே பரம வைராக்கியத்தையடைந்துவிட்டால் அம்மஹானுக்கு கிரஹஸ்தாசிரமமின்றியே மேலாச்சிரமத்தையடைய அதிகார மிருப்பதால் மற்ற ஸம்ஸ்காரங்கள் அவ்வளவு அவசியமில்லை. இதன் விரிவை ஒவ்வொரு ஸம்ஸ்காரங்களையும் நிரூபிக்கும்பொழுது நிரூபிப்பாம்.

1-வது கர்ப்பாதானம்.

கர்ப்பாதானமென்பது, கர்மபூமியில் முறைப்படி சிரௌதஸ்மார்த்த தர்மங்களைச்செய்து, அதன் பயனை லோகாந்திரத்தில்

அனுப்வித்துப் பின்னர் கர்மசேஷத்தால் இப்புவியில் வைதிக கர்மாதிகாரம் பெறவேண்டி வரும் ஜீவனுக்கு அதற்குரிய சரீரமெடுப்பதற்கோருபாயமானகாரியம். வைதிககர்மானுஷ்டானுதிகாரம் வாய்ந்த துவிஜாதியில் ஜனிப்பது சுவர்க்கம் முதலிய புண்யலோகங்களில் தேவத்தன்மை முதலிய உத்தமபதவியை அடைந்திருப்பவனுக்குத்தான் கிடைக்கும். பாபப்பயனுகிய நரகாதிகளேயனுபவித்திருந்தவர் அதற்கடுத்த ஜன்மமாய் மானிடப்பிறவியை அடைய முடியாது. இந்தக் கருத்து ப்ரம்மஸூத்திரம் மூன்ருவது அத்தியாயம் முதல் பாதமாகிய வைராக்கிய பாதத்தில்ஆருவது அதிகரணத்தின் பாஷ்யத்தில் ஸ்பஷ்டமாயுள்ளது.

அதனுற்ருன் மானிடராய்ப்பிறத்தலரிது என்று ஸகல சாஸ்திரங்களும் கூறுகின்றன. அத்தகைய உத்தம ஜன்மம் பெற்ற ஸந்ததியார்தான் தானும் சுத்தமாயிருந்து தனது பிதுருக்களேயும் கரையேற்றி இவ்வுலகிற்போலலோகாந்தரத்திலும் திருப்தியடையும்படி செய்வார்கள். ஸந்ததி சுத்திக்காகத்தான் இந்த முதலாவது ஸம்ஸ்காரம் மந்திர பூர்வகமாய் உசிததேசத்தில், யுக்தமான காலத்தில் துவிஜாதிகளால் செய்யப்படுகின்றது. தேசகாலாதி நியமமில்லாமலும் மந்திரபூர்வகமா யில்லாமலும் பசு பக்ஷி முதலியவைபோல் ஸந்ததி விருத்தியை மாத்திரம் கருதி அபிவிருத்தி செய்விக்கப்பட்ட பிராணிகள் பசுபக்ஷி சந்ததிபோலவே இம்மையிலும் மறுமையிலும் ஜனிப்பித்தவர்களுக்கு உபயோகப்படமாட்டாது. அதனுல் அத்தகைய சுத்த ஸந்ததியைக் கருதும் பிறப்பிவிப்போர் அதற்காகவென்றே தர்மசாஸ்திரங்களிலும்,சோதிட சாஸ்திரங்களிலும் குறிக்கப்படும் தேசகாலாதி நியமங்களேயும், மற்றும் பலவாருய் விதிக்கப்படுகின்ற நியமங்களேயும் நன்ருய்த் தெரிந்து கொண்டு பிரவிருத்திக்க வேண்டும். அவற்றுள் தேச நியமங்களேக்குறிக்குமிடத்து, பாஹ்யதேச மென்றும், ஆந்தரதேச மென்றும் தேச மிருவகைப்படும். பாஹ்யதேச மென்பது விலக்கப்பட்ட தேவாலயம், தீர்த்தக்கரை, மரத்தடி முதலியனவென்றும், விதிக்கப்பட்ட சயனகிரஹம் முதலியனவென்று விரிவாய்க் கூறப்படுகின்றது. ஆந்தர தேசமென்பது சரீராவயங்களாம். அதிலும் விலக்கப்பட்டதும், விதிக்கப்பட்டதுமுண்டு.

இதன் விரிவு சரகம் முதலிய வைத்திய சாஸ்திரங்களில் குறிக்கப்படுகின்றது. காலநியமமென்பது மூன்று வகைப்படும். அதாவது—முதலாவது ஸம்யோகத்திற்காக முகூர்த்தக் கிரந்தங்களில் குறிக்கப்படும் திதிவார நக்ஷத்திரம் முதலிய பொருத்தமுடைய நாளொருகாலம். பிற்பாடு ஏற்படக்கூடிய ருதுகால மிரண்டாவது. அப்பொழுதும் விதிவிலக்குள்ளகாலம் மூன்றுவது. இந்தக் கால நியமங்களை நன்ருய் கெவனித்து சுத்தமான ஸந்ததிவிருத்தியடைந்து இஹத்திலும் பரத்திலும் யாவரும் சுகமாயிருப்பார்களாக.

V. S. வெங்கட்டராமசாஸ்திரீ.

ஆர்யதர்மம் பத்திராதிபர்.

ஓர் வேண்டுகோள்.

நாளது அர்ப்பிசி மாதம் 27ந்தேதி வெளியான ஆர்யதர்மம், 639-ம் பக்கத்தில் "தீண்டாமைவிலக்கு" என மகுடமிட்டு ப்ரும்மஸ்ரீ எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் எழுதிய வியாஸத்தைப் பலதடவை வாசித்தேன். ஸ்ரீமான் சாஸ்திரிகளவர்களுக்கு நமது ஸனாதன தர்மத்திலுள்ள வேரூன்றிய பக்தியும் மனு முதலிய மஹான்களிடத்திலுள்ள அளவு கடந்த பக்தியுமே இவ்விதம் அவர்களை எழுதச்செய்திருக்க வேண்டுமென்பதிலேய்யமில்லை என்பது திண்ணம். ஆயினும், பிரும்மஸ்ரீ சாஸ்திரிகள் எனக்கு வெகுகால நண்பராயிருந்து வருவதை யொட்டி ஒரு விஷயத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது:—நமதுதேசமஹாசபையெனச்சொல்லப்படும் காங்கிரஸ்ஸபும்,ராஜாங்கசட்ட சபைகளும்,தீண்டாமையை யெப்பாடுபட்டும் ஒழித்தே தீருகிறதெனக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாலும், அதற்கிணங்க மனதிற்றோன்றுவதை யெல்லாம் நமது சாஸ்திரங்களிருப்பதாகவோ, அல்லது சாஸ்திரங்களை நம்பவில்லையென்று கூறவோ, மேற்கண்ட விடங்களிற் பற்றுள்ளவர்கள் பின்வாங்கமாட்

டார்களாகையால் தலைக்குமேல் வெள்ளம் போகும்பொழுது "மூக்கில் ஜலம் ஏறிவிட்டது" என்று சொல்லுவதுபோல நாம் இவ்வார்த்தையைக் கண்டு ஆச்சரியமோ, ஆத்திரமோ படுவது நியாயமில்லை. ஆகவே, ஆஸ்திகர்களாய நாம் ஒன்றுகூடி சாசுவத தர்மகோப்தாவான ஸ்ரீ கோபாலனே நமது குருநாதனுக எழுந்தருளி உலக க்ஷேமார்த்தம் விஜயயாத்திரை செய்துவருவதால் அக்கடவுளிடம் இதை முறையிட்டு அக்கடவுளின் ஆணையைச்சிரமேற்றுங்கி ஆங்காங்கு ஆஸ்திகஜன சபையொன்றை யேற்படுத்தி அச்சபைமூலம் நமது புராதன சாஸ்திரீயமான கொள்கைகளைப் பின்பற்றுவர்களைப் பக்கபலமாகக் கொண்டு, அனேகம் புராதன ஆஸ்திகர்களின் கையொப்பம் வாங்கி இந்தியாமந்திரி வைஸிராய் கவர்னர் முதலியவர்களுக்கு "புராதன மார்க்கத்திற்கு விரோதமாய் எதையும் சட்டமூலமோ வேறுவிதமோ ஏற்படுவதைத் தாங்கள்த் தடைசெய்ய வேண்டும்" என விக்ஞாபித்துக் கொள்ளவோ, அல்லது எப்பாடுபட்டும் இப்புதியவழிக் கிடங்கொடுப்பதில்லையென்ற எண்ணத்துடன் இவ்வழியிலீடுபடும் புராதன ஆஸ்திகர்களை ஒரு சங்கமாக்கிப் பிடிவாதமாக நடக்கும்படிக்கான உபதேசம், துண்டுப்பிரசுர வினியோகம் இவற்றைச் செய்தோ வரவேண்டுவது இச்சமயம் அவசியத்திலும் அவசியமாதலால், எனது ஆப்த நண்பரான ப்ரும்மஸ்ரீ சாஸ்திரிகளும் ப்ரும்மஸ்ரீ உபபத்திராதிபர் அவர்களும் இவ்விஷயத்தில் தக்கதோர்முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன். அவ்விதம் அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியில் எனது சக்திக் கியன்றவளவு நானும் கலந்து கொள்ளத் தயாராகயிருக்கிறேன்.

கடலங்குடி, நடேசசாஸ்திரியள்.

ஆர்யமத ஸம்வர்த்தனீ பத்திராதிபர்.

குறிப்பு:—இந்த விஷயத்தில் என்னுலியன்றவரையில் செய்ய நான் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறேனென்பதற்கு என்னால் அச்சிட்டு வெளியிடப்பட்ட "சண்டாளஜாதி தத்வ நிரூபணம்." என்கிற புஸ்தகமே தகுந்த அத்தாட்சியாகும். இனியும் முடிந்த

வரையில் செய்ய ஸித்தனுயிருக்கிறேன். இது ஸநாதனதர்மாபிமாணிகளாயும், ஆஸ்திகர்களாயுமுள்ளயாவரும் அவசியம் கவனிக்க வேண்டிய விஷயமே. ஸநாதனதர்மத்தைச்சாஸ்திரப்படி சரியாய் அனுஷ்டிக்க வேண்டுமென்று கூறுகிறவர்கள் பகவானுடைய ஆக்ஞையைத் தெரிவிக்கிறார்களே யன்றி தம்சொந்த அபிப்பிராயமாகவோ சொந்தப் பிரயோஜனத்தைக் கருதியோ அல்ல. பகவானுடைய ஆக்ஞையை அனுஷ்டிக்கும் பக்தர்களுக்கு அவருடைய அனுக்கிரபலம் நிச்சயமாய் ஏற்படும்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மாபிவர்த்தனீஸபை 14ஆம் ஆண்டுவிழா

தென்னார்க்காடு ஜில்லா திருக்கோவிலூரில், 14 ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்டு காலஞ்சென்ற வெங்கந்தூர். கணபதி சாஸ்திரிகள் முதலிய பண்டிதர்களாலாதரிக்கப்பட்டுவந்த ஷை ஸபை சில ஆண்டுகளாக ஓய்ந்திருந்தது. பிரும்மஸ்ரீ சேஷகனபாடிகள் சுப்ரமண்ய சாஸ்திரிகள். மகா-ள-ஸ்ரீ நடேசய்யர். கண்ணய்யர் முதலிய வைதிகாபிமானிகளால் ஓராண்டாக ப்ரதி பானுவாரத்திலும் வைதிக மார்க்கமுபன்யஸிக்கப்பட்டு புத்துயாளிக்கப்பட்டது. ஐப்பிசி 22உ சனிக்கிழமை மாலை 3 மணிமுதல் சென்னை அமரகலாவிலாஸினீஸபை பிரும்மஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா அக்ராஸநம் வஹித்தார். தேவதாப்பிரார்த்தனை வருஷாறிக்கை ஆனபிறகு மகா-ள-ஸ்ரீ வி. நடேசய்யரவர்கள் "தற்கால நிலைமையும் முன்னேற்றமும்" என்பதை ஒருமணி உருக்கமாகப்பேசினார். அக்ராஸநர்வர்ணாச்ரம தத்வம் நோக்கம் பலன், தீண்டாமை, யின் கருத்து முதலியவைகளை சுருதிஸ்மிருதி புராணயுக்தி அநுபவங்களைக்கொண்டு எல்லோரும் ஏற்கும்படி உபந்யஸித்தார். தீண்டாமைக்கு வேதப்ரமாணமில்லை என்று வாதிக்கும் சில பண்டிதாபாஸாளுக்குத் தக்கபதில் கூறினார். இடையிடையே சிலர் கேட்ட ஸந்தேஹங்களுக்கு பதிலளிக்கப்பட்டது. மறுநாள்காலை

வேதவித்யா பூஷணம் பிரும்மஸ்ரீ சுப்பராமகனபாடிகள் அக்ராஸனம் வஹிக்க ஸ்ரீமான் துரைசாமி அய்யர் ஸ்வதர்மம் என்பதை உபந்யஸித்தார். அக்ராஸநர் ஆந்ஹிக தர்மங்களை மந்திரார்த்த முடன் அழகாக உபந்யஸித்தார். மாலை 2 மணிக்கே ஏராளமான ஜனங்கள் கூட அக்ராஸநர் லோகாந்தரம் உண்மை என்ற விஷயத்தில் மாணத்திற்குப் பிறகு ஜீவனது கதியை 3 மணி மந்திரபாஷ்யத்துடன் உபந்யஸித்தார். பிறகு ஸ்ரீ வெ. ஸோ. சர்மா ஸதாசாரமும் ஆரோக்யமும் என்ற விஷயத்தில் ஸ்நாநவஸ்திர புண்ட்ர தாரண ஜபஹோம ஆஹாராதிகளின் இம்மை மருமைப் பயன்களை விஸ்தாரமாக மேனாட்டுவைத்ய ஆராய்ச்சியின் மேட்கோளுடன் வெகுஉருக்கமாக உபந்யஸித்தார். முடிவில் ஆங்கு ஓர்வேத காவ்ப வகுப்பு நடத்த வேண்டுமென்றும், ஆர்யதர்மம், பிராம்மணன் இப்பத்திரிகைகளை வரவழைத்துப்படிக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார். ஆங்கு கூடிய அதிகாரிகளும் வக்கீல்களும் பண்டிதர்களும், இதை ஆமோதித்தனர். வந்தனோபசாரமும் தேவதா பிரார்த்தனையும் நடந்து ஸபைமுடிந்தது.

வெ. ஸோமசர்மா, காரியதரிசி

ஓர் கண்டனக் கூட்டம்.

சென்னை அமாகலா விலாஸினீஸபை, பிராமணஸபை யிவற்றின் ஆதரவில் ஐப்பிசி 29 காலை சாந்தாச்ரமத்தில் பிரும்மஸ்ரீ சுப்ராம சாஸ்திரிகள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் கூடி அடியிற்கண்ட படி ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

1. "சென்ற மாதம் மசூலிப் பட்டணத்தில் பிரும்மஸ்ரீ காவ்ய கண்ட கலியுக காளிதாஸ கணபதிசாஸ்திரிகள் தலைமை வஹித்து தீண்டாமைக்கு வேதப்ரமாணமில்லை என்றும், அவர்களை ஆலயத்தில் விடலாமென்றும் பேசியதை கண்டிக்கிறது. வேதப்ரமாணத்தைத் தழுவிப ஸ்மிருதி ஆசாரம் இவைகளைக் கைவிடுவது உசிதமல்ல. வேதமோ அநந்தமாம். வேதார்த்தத்தை ஸ்மிருதி

களாக வெளியிட்ட மஹான்களது சொல்லை அவமதிப்பது ஓர் பண்டிதருக்கு அழகல்ல. இனியாவது சாஸ்தார்தத்தங்களை திருத்திக்கூறி தேசத்தையும் தன்னையும் தேசமக்களையும் கெடுக்காமலிருக்கும்படி அவரை வேண்டுகிறது

2. 1926 வருஷம் சட்டசபைத் தேர்தலில் முற்றிலும் வர்ணாச்ரம தர்மத்தைக் கைப்பற்றுபவரை தேர்ந்தெடுக்கும்படி மஹாஜனங்களை வேண்டுகிறது.

3. ஷை விஷயத்தைப் பிரசுரம் செய்யவும் ஆங்காங்கு வேத காவ்ய வகுப்புக்களை ஏற்படுத்தவும் அடியிற்கண்ட பண்டிதர்களைக் கொண்ட ஓர் கமிட்டி ஏற்படுகிறது. பிரும்மஸ்ரீ வெ. ஸோம தேவசர்மா. ஸம்ஸ்கிருத பண்டிதர். எம். எம். ஸ்கூல் சிரோமணி. வெ. சுப்ரமண்யசாஸ்திரி (பச்சயப்பன் ஸ்கூல்) சுப்ராம சாஸ்திரிகள். (ஜகத்குருசங்கரமடம் சென்னை) ராமனுததீக்ஷிதர். மணிபாகவதர். ரா. நாராயணராவ்.

தீ. ராமநாததீக்ஷிதர்.

வீண்கவலை வேண்டாம்.

சிலர் புகழ் சம்பாதித்துக்கொள்வதற்காக இக்காலத்தில் பத்திரிகைகளைத் துணையாகக் கொள்கின்றனர். நியாயமான விஷயங்களைப் பொது ஜனங்கள் நன்கு அறிந்து கொள்ளும் வண்ணம் தனது ஊழியத்தைச் செய்துவரும் பரிசுத்தக் கரிவிகளாகிய பத்திரிகைகளைச் சிலர் அநாவசியமான விஷயங்களால் நிரப்புவது வீண்வேலையேயாகும். அவ்வித வேலைகளில் ஒன்று இனிவரப் போகின்ற பிரளய காலத்தைப் பற்றியவாதம்.

29—10—24ல் வெளியான மித்திரனில் அன்பர் வெங்கடாசலய்யர் என்பவர் கொத்தமங்கலம் ஸ்ரீமான் சந்திர ஜோஸ்யரவர்கள் 30—9—24ல் கேட்டிருந்த ஜோதிடசம்பந்தமான கேள்விகளுக்கு என்ன என்ன சமாதானம் பொருந்தாதோ அதையதையெல்லாம் கூறுகின்றார். சந்திர ஜோஸ்யர் கேட்டிருந்த உசித

மான் வினுக்களுக்கு இவர் கூறும் சமாதானம் பள்ளிச்சிறுர் கூறு வதினும் குறைந்ததாக இருக்கின்றது.

இவர் '1927ல் வரப்போவதாகச் சாதிக்கும் அதீதப் பிரம்ம கல்பத்தில் ஒவ்வொரு நாளும் 15 நாழிகைகளாக நீளக்கூடுமா' என்பதை ஜோதிட சாஸ்திர ஆதாரத்துடன் (அல்லது கணித முறையில்) விளக்கும் வண்ணம் கேட்டிருக்க, அதனை மறந்து 'காகபுசுண்டர் பல பிரளயங்கண்டவர்' என்கிருர். இது என்ன சமாதானம்? அவர்பல பிரளயங்கண்டவராகவே இருக்கட்டுமே! அதனுல் அவர்சொன்னதாகச்சொல்வதெல்லாம் பிரமாணமாகுமா? யுக்திக்கும் பொருந்த வேண்டாமா? "அந்த நூலில் கூறியிருப்ப வைகளைத் தெளிவாகக்கூறி நிரூபணம் செய்யுங்கள்" என்ருல் "1927 வரை காத்திரு" என்கிருர். அவர் சொல்வதுபோல் பிரள யத்திலகப்பட்ட நூல்போக எஞ்சியுள்ள நூல்களிலும் 'பிரபவ தொடங்கிய 60 வருஷங்களில் கடைப்பங்கிலுள்ள 5 வருஷங்கள் அதமாதம வருஷங்கள்' என்றும் 'அவற்றிலும் இறுதியிலுள்ள 3 வருஷங்கள் ஒன்றைப்பார்க்கினும் ஒன்று மிக மிகக் கொடியது என்னும் கூறப்பட்டிருப்பது உண்மைதான். கி. பி. 6 ஆவது நூற்றுண்டில் விளங்கிய ஸ்ரீ வராஹமிஹிரர் என்னும் வான சாஸ் திரியார் "ஒவ்வொரு பரிவர்த்தனை (சுழற்சி) யிலும் ரக்தாக்ஷி குரோதன அக்ஷய வருஷங்களில் அடியிற்கண்டவாறு பயன் விளையும்" என்று கூறுகிருர்.

ரக்தாக்ஷி வருஷத்தில் மிருகங்களுக்கும் ஜனங்களுக்கும் பீடை அதிகம். குரோத(ந) வருஷத்தில் அதன் (பெயருக்கேற்ப) கோபதாபங்களால் நாடுகள் அழியும். 60 ஆவது வருஷத்தின் பெயர் 'க்ஷய' என்பது. (இதனை அக்ஷய வருஷமென்று பஞ்சாங் கத்தில் எழுது கின்றனர். வராஹமிஹிரர் கொள்கைப்படி அது பிழை) அழிவு என்பது இதன்பொருள். என்வே வெகுஜனங்கள் அழிவர். ஆனுல், விவசாயிகளுக்கும் வைசியருக்கும் பிறர் பொரு ளைக் கவர்வோர்க்கும் நன்மையுண்டாம். (இதுபொதுவாகக் கூறப் பட்டது. பொது ஜனங்களின் புண்ய பாவங்கள் கூடிக்குறையுந் தோறும் இதுமாறும்) இனி இடைக்காடர் கூறுகின்ற பயன் களையும் இங்கு கவனிக்க வேண்டும்.

இரத்தாட்சி யாண்டதனில் நாற்காலிக்கும் பயமாம்
மெத்த மழையுண்டு விளைவுண்டு—இத்தரையில்
வேந்தர் பகைத்திடுவர் வெய்திக்கு வாரிதியிற்
சார்ந்த பஞ்சமாகி விடுந்தான்.

குரோதனத்திற் பஞ்சமாங் கூர்ச்சர தேசத்தில்
விரோதத்தால் வேந்தர் மெலிவர்—சரோருகத்து
மானே தென்பூமி மகிழுந் திடமுடனே
தானே விளைவுண்டு தான்.

மானே கேளம சயத்தின்மாரி யற்ப மானலுங்
தானே நலமுண்டாங் தாரணியில் வானூறுங்
கார்பொழியும் வேளாண்மை கானமெங்குந் தோன்றுமே
சீர் பொழிய ஓங்குந் திரு.

பவிஷ்யோத்தரபுராணம் (பிற்பகுதி)

60வது அத்யாயத்தில் பின்வருமாறு விளக்கப்பட்டிருக்கின்றது.

இரத்தாக்ஷ (இரத்தாக்ஷி என்பதும் பிழை) வருஷத்தில் பஞ்சமும், நோயும், கொடிசெடிகளுக்கு அழிவும், பயிர்நஷ்டமும் ஜனமரணமும் அதிகமாகும்; கொடிய நோய்களுக்கும் குறைவு இராது. குரோதனவருஷத்தில் முற்கூறியவற்றுடன் பெருங் கலக்கமும், நாட்டில் குழப்பமும் சேர்ந்துகொள்ளும். க்ஷயவருஷத்தில் பெரிய பூகம்பம் உண்டாகும். அதனுல் தேசத்திற்கு அழிவும் உண்டாகும்; பிரஜை குறையும்; ஸௌராஷ்டிராம், மாளவம், தென்தேசம், கொங்கணநாடு இவற்றில் பஞ்சங்காணும்; கௌமுதீ, சர்மநதீ, யமுனை என்ற நதிதீரத்திலும், சிந்துநதிப் பிரதேத்திலும், விந்தியமலைச்சாரலிலும் சேதம் தோன்றும். சிங்களம், மத்தியதேசம்(இமயமலைக்கும் விந்தியமலைக்கும் நடுவிலுள்ள பிரதேசம்), காலஞ்சாம், (மஹாபாரதம், அர்ச்சுனன் தீர்த்தயாத்திரைப் படலம் பார்க்க) என்ற இடங்களிலும் சேதமுண்டாகும்.

இங்ஙனம் 60 வர்ஷ விளைவுகளையுங் கூறிய வாராஹமிஹிர (வான) சாஸ்திரியாரும், பிறநூலாசிரியர்களும் இவற்றையே தமது சித்தாந்தமாகக்கூறவில்லை. ஆனல், பல முதநூலாசிரியர்களின் கருத்துக்களைத் தழுவிக் கூறுவதாகவே உறுதிகூறுகின்ற

னர். அதுபோலன்றிக் 'காகபுசண்டர் நூல் தனி நூலாகவே கொள்ளப்படவேண்டும்' எனக் கூறும் அய்யரவர்களின் விருப்பத்தை யாரும் குறைக்கவிரும்பார். அதனைக்குறித்து அய்யர் ஸந்தேகங்கொள்ளவேண்டாம். ஆனால் எந்த நூலும் தான் வெளியிடுகின்ற கருத்தின் பெருமையினால் பெருமைபடைகின்றதேயன்றி அதன்மீது பலவந்தமான பெருமையைச் சுமத்த எவருக்கும் உரிமை கிடையாது.

காகபுசுண்டருக்கும் நமக்கும் எவ்வித மனஸ்தாபமும் இல்லை. அவரிடத்து நமக்கு மிகுந்த பக்தியுண்டு. ஆனால், ஜோதிட நூல் ஒன்று இயற்றிய அவர் இனிவருங்கால நிகழ்ச்சிகளைக் கூறத் தொடங்கியவரை அக்கருத்து எவ்வித யுக்திக்கும் முரணின்றிய வாறு அமைந்திருப்பதை அன்பர் அய்யரவர்களும்ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படியானால் அவர் கூறும் தீர்க்கதரிசன பாகத்தை வசனமாகவோ செய்யுளாகவோ முதநூலில் உள்ளபடி வெளியிடட்டுமே.

அதீதப் பிரம்ம கல்பம் என்ற பெரியாரின் கருத்தை நாமே ஊகித்துக் கொள்ளும் சுதந்திரத்தை மாத்திரம் அன்பர் நமக்குக் கொடுத்திருப்பதாகக் கூறுகின்றார். அதையும் யோசித்துப் பார்த்தும் பொருள் விளங்கவில்லை என்ற முடிவுக்கு நான் வந்திருப்பது போலவே பலநண்பர்களும் வந்திருப்பதாகத் தெரிவதால் இதன் பொருளை நமது அய்யரே விளக்கித் தருமாறு வேண்டுகிறேன். பவிஷ்யத் புராணத்தில் தூம கேதுவைப்பற்றிக்கூறியிருப்பதாகப் பொதுவே கூறினார் நமது நண்பர். 'இன்ன இடத்தில் கூறியிருக்கிறது' எனத் தெளிவாகக் கூறுவாரானால் அதன் பொருளை இவர் அறிந்ததாகக் கொள்ளலாம்.

ஈசனார் வால்வள்ளிகளின் பெருமையை மிகைப்படுத்திக் காட்டுதற்காகப்போலும் அதன் விபரம் தமக்கும் தெரியாதெனக் கூறுவதாகவே வைத்துக் கொள்வோம். அவ்விதங்கூறி விட்டதால் அதன் விபரம் ஈசனுக்கும் தெரியா தென்பது கருத்தா? "ஈசனுக்கே அதன் விபரம் தெரியாது' என்றால் அவருக்குப்பின் அவதரித்தவர்களால் கூறப்பட்டுள்ள நூல்களில் எவ்வாறு விளங்கும்? எனப்பொதுவே கூறுகின்றார். அய்யர்." 'ஈசனுக்கே

தெரியாத சங்கதி காகபுசுண்டருக்கு எவ்வாறு தெரியும்?'' என்று நாமும் கேட்டாலோ? காகபுசுண்டர் ஈசனுக்கும் முற்பட்ட காலத்தவர் போலும்!

"காகபுசுண்டர் நூல்களிலிருந்து என்னால் வரையப்பட்ட தூமகேது பிரம்ம ரந்திரத்திலிருந்து வருகிறது'' என்கிறார். இதன் கருத்து எழுதியவருக்கே விளங்க வேண்டும் போலும்! "பின் நூலைத்தழுவினால் உண்மையறிவது துர்லபம்'' என்கிறார். மனிதர்களின் அறிவு விசாலமாகி வருவதே படைப்பின் நியமமாதலால் அதனை அன்பர்மறுக்காதிருத்தல் நலம். இதற்கு ஆதாரம்வேண்டுமானால் திருப்பாதிரிப் புலியூரில் ஸ்ரீமான் சிவஞானம் பிள்ளையவர்கள்செய்த பிரசங்கத்தை 1925-ஜூலை மாதப்பத்திரிகைகளில் படித்துப் பார்க்கலாம்.

"முன் நூல்படி 'சுவேத வராககல்பம்' என்பது 'சுவேதவர் ஆககல்பம்'' எனமுப்பதங்களோடுகூடிய தொடராகும்'' என்கிறார். 'இதன் பொருள் வெள்ளையர்ஆகும் கர்ப்பம் என்பதேயாம்' எனத் தோற்ற ஏகாரமும் கொடுத்துப் பொருள் விளக்கமும் செய்கின்றார். சுவேத வராஹகல்பம் என்ற வடமொழிப் பகுபதத்தை இவர்மனம் போனவாறு ஒடித்துப்பதப்பிரிவும் வியாக்கியானமும் செய்கின்றார். சுவேத வராஹகல்பம் என்ற சொல் தொடரை சுவேதவர், ஆக, கர்ப்பம் என்றுபிரித்து அன்பர்கூறும் முறைபிற பொருள் செய்யுமாறு வ்யாகரண சாஸ்திரமேனும் அல்லது தமிழிலக்கணமேனும் இடங் கொடுக்குமா என்பதைப் பத்திரிகா நேயர்கள் ஒருமுறை ஆலோசிக்க வேண்டுகிறேன். "ஆனதினால் இக்கல்பத்தில் வெள்ளையருண்டாகி இப் பாதகண்டம் அடைந்த பின்னரே அன்னவரால் இப்பூமியில் யாவரும் வெள்ளை என்னும் பரிசுத்தம் அடைய வேண்டியதற்காக இச்சுவேத வராஹகல்பத்தில் சுவேதம் என்ற தூமகேது 75 வருஷத்திற்கு ஒருதடவை தன் சுயரூபத்தோடு தோன்றிக் கெடுதல்களைத் தொலைப்பதற்காக மேலானயூகங்களைக்கொடுத்து வந்ததுபோக, இன்னும்அதனிடம் உள்ள எல்லா சக்திகளையும் கலி 5011ல் அத்தூம கேதுவே தோன்றி இகத்திற்கு வேண்டிய நன்மையையும் புத்தி நுட்பத்தையும் சாசுவதமா யடையும் படிக்குக் கொடுத்திருப்பதன் பூர்த்

திக்காகக் கற்பகம் என்ற தூமகேது தோன்றி கற்பகத்தருவைச் சார்ந்த தேவர்கள் வாழ்வதுபோல உலகத்தில் யாவரும் அவ்விதம் வாழ்வதற்கெண்ணிய பரப்பிரம்மமே உலக்கடைந்து சுவேதகேது நாடிகாட்டி வந்த காலத்தின் அளவே 75 நாழிகையாகவும் அது உலகத்தோர்க்கு ஒருநாளாக ஏற்படுத்தியும் வருவதை யனு சரித்தே" என்று மொட்டையாக நிறுத்திவேறுகதை தொடங்கு கிறார்.

இவ்வளவு வார்த்தைகளைக் கொட்டியளக்கிற இவர் என்ன அபிப்பிராயத்தை வெளியிடுவதற்காக இவ்வளவு கஷ்டப்படுகிறு ரென்பது விளங்கவில்லை. ஐரொப்பியருண்டாகி இப்பரதகண்டம் வந்தடைந்த பின்னர் அன்னவரால் இப்பரதகண்டமும் உலகமும் பரிசுத்தமடைந்த உண்மையை இந்த ஜோஸ்யர்தான் கூறவேண் டும். இந்த அபவாதத்தைக் காகபுசுண்டர்மீது இவர் ஏற்ற முயன்றது மன்னிக்கத் தகாதசெயல் தம்மிடம் மாத்திரமிருப்ப தாக இவர் கூறும் காகபுசுண்டர் நாடிஎன்ற சுமைதாங்கிக் கல்லின் மீது இவர் என்ன கதைச் சுமைகளையோ கொண்டு தள்ளுகிறார்! மேநாட்டார் இப்பரதகண்டம் வந்தடைந்த பின் நாம் அடைந்த பரிசுத்த விபரத்தை அவரிடமே இவர் கேட்கட்டும். சுவேதம் என்ற தூமகேது 75 வருஷத்திற்கு ஒருதடவை தன் சுயரூபத் தோடு தோன்றுமென இப்போது கூறுகின்ற இந்நண்பர் 9-8-24 மித்திரனில் எவ்வாறு கூறியுள்ளாரென்பதைப்பழைய பத்திரிகை களை வைத்திருப்போர் யாவரும் படித்துப் பார்க்கலாம்.

(தொடரும்)

T. K. ராமபத்ரசர்மா.

உ

ஸ்ரீவித்யாஹம்ஸராயஜூநம: ॥

சிதம்பரம் அத்வைத ஸபை.

நிகழும் குரோதனஹு மார்கழிமீ 7உக்கு (21—12—25) ஸோமவாரம்முதல் நடக்கப்போகிற ஸ்ரீமத் ஆநந்தநடராஜமூர்த்தி யினுடைய ஆர்த்ராதரிசன மஹோத்ஸவ ஸமயத்தில் வழக்கம்

போல் பிரபுக்களுடைய தனஸஹாயத்தால் நடந்துவரும் அத்வைதஸபை உபக்ரமிக்கப்பட்டு ஷை தேதிமுதல் மார்கழிமீ 14உ வரையில் பிரதிதினங்களிலும் காலே 7-மணிமுதல் 9-மணிவரையில் உபநிஷத் ஸூத்ரபாஷ்ய பாராயணமும், 9-மணிமுதல் 11-மணி வரையில் அடியிற்கண்ட க்ரந்தங்களில் லேகனவாசிக பரீக்ஷைகளும், மாலே 3-மணிமுதல் 6-மணிவரை பெரிய பண்டிதர்களைக் கொண்டு வாக்யார்த்தங்களும் உபந்யாஸங்களும், 15உ ரதோத்ஸவதினத்தில் மாலே 2-மணிமுதல் வேதாதி ஸகலவித்யைகளிலும் ப்ரஸங்கங்களும் வித்வான்களுக்கு ஸம்மானமும் நடைபெறும். ஆகையால் ஷை அத்வைதஸபைக்கும், 16உ ஸ்ரீமத் ஆநந்தநடராஜமூர்த்தியினுடைய ஆர்த்ராதர்சன மஹோத்ஸவத்துக்கும் ஆஸ்திகசிகாமணிகள் வந்திருந்து ஸபையையலங்கரித்துப் பேரானந்தமடையும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

பரீக்ஷைக்குரிய கிரந்தங்களும், பரீக்ஷாகாலமும் ஸம்பாவனையும்.

22—12—25 காலே 8-மணிமுதல் 11-மணிவரை. ரூ.

ஶ்ரீமச்சங்கரபகவத்பாதக்ருதஸூத்ரபாஷ்யஸ்ய ஸமந்வயஸ்ய	10
ஶாபரபாஷ்ய ப்ரதமாத்யாயஸ்ய	7

21—12—25 காலே 8-மணிமுதல் 11-மணிவரை.

ஸாமாந்யாஸம்ப்ரதாயா:	7
மஹாபாஷ்ய ப்ரதமாத்யாயஸ்ய	7

முக்கியகவனிப்பு.

இவ்வருஷ ஸபையில் ஸூத்ரபாஷ்யத்தில் 16 பாதங்களையும் மஹா பண்டிதர்களைக்கொண்டு உபந்யாஸரூபமாக ப்ரவசனம் செய்வித்து ஸகல ஆஸ்திகர்களும் அநாயாஸமாக அத்வைதரஹஸ்யத்தைப் பூர்ணமாக அறியும்படிசெய்ய உத்தேசித்திருப்பதால் ஆஸ்திகர்கள் அனைவர்களும் வந்து சிரவணஞ்செய்து ஸகலவித சிரேயஸ்ஸையும் அடையும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

மஹாமஹோபாத்யாய

சிதம்பரம் } சிவ. தெண்டபாணிஸ்வாமி தீக்ஷிதர்,
12–11–25 } நெப்பத்தூர் மிராசு, N. ஸ்வாமிநாதய்யர், கார்யதர்சிகள்.